## வகுப்பு - 7 - பருவம் - 2 - குடிமையியல்  வகுப்பு - 8 - குடிமையியல்

### 2, 1. மாநில அரசு, மாநில அரசு எவ்வாறு செயல்படுகிறது?

**பயிற்சி வினாக்கள்:**

1. கீழ்க்காணும் வாக்கியங்களில் சரியானது எது?

   (1) முதலமைச்சர் என்பவர் எதிர்க்கட்சித் தலைவர்.

   (2) தமிழ்நாட்டில் ஈரவைச் சட்டமன்றம் செயல்படுகிறது.

   (3) உயர் நீதிமன்றம் மாநில அரசின் உச்சபட்ச நீதியமைப்பு.

   (4) மாநில அரசின் மூன்று முக்கிய நிர்வாகப் பிரிவுகள் கிராமம், நகரம், மாநிலம்.

2. இந்தியாவிலுள்ள மொத்த மாநிலங்களின் எண்ணிக்கை ______.

   (1) 26  (2) 28  (3) 27  (4) 30

3. பொருத்துக.

   i. ஆளுநர் - அ. 9

   ii. முதலமைச்சர் - ஆ. தலைமைச் செயலகம்

   iii. யூனியன் பிரதேசங்கள் - இ. மாநிலத்தின் தலைவர்

   iv. புனித ஜார்ஜ் கோட்டை - ஈ. பெரும்பான்மைக் கட்சித் தலைவர்

   (1) i - அ ii - ஆ iii - இ iv - ஈ  (2) i - இ ii - ஈ iii - அ iv - ஆ

   (3) i - ஈ ii - ஆ iii - அ iv - இ  (4) i - இ ii - அ iii - ஈ iv - ஆ

4. தவறான இணையைக் கண்டுபிடி.

   (1). சட்டமன்றப் பேரவை - கீழவை

   (2). சட்டமன்ற மேலவை - மேலவை

   (3). ஆளுநர் - மாநில அரசின் தலைவர்

   (4). முதலமைச்சர் - எதிர்க்கட்சித் தலைவர்

5. உயர் நீதிமன்ற நீதிபதிகளை நியமிப்பதில் பங்கு பெறாதவர் யார்?

LIVEWORKSHEETS

(1) ஆளுநர் (2) உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி

(3) முதலமைச்சர் (4) குடியரசுத்தலைவர்

6. கீழ்க்கண்ட கூற்றுகளில் தவறானவற்றைத் தேர்ந்தெடுக்கவும்.

(i) சட்டமன்றத்தில் உறுப்பினர்களின் கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதிலளிப்பர்.

(ii) மாநிலத்திலுள்ள பல்கலைக் கழகங்களின் வேந்தராக முதலமைச்சர் செயல்படுகிறார்.

(iii) ஒரு மாநிலத்தின் ஆளுநர், பிரதமரால் நியமிக்கப்படுகிறார்.

(iv) உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஓய்வு பெறும் வயது 62.

(1) i மற்றும் ii (2) iii மற்றும் iv (3) I மற்றும் iv (4) ii மற்றும் iii

7. மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்கள் கீழ்க்கண்டவர்களுள் யாரைத் தேர்ந்தெடுப்பதில் பங்கு பெறுகின்றனர்?

(i) குடியரசுத் தலைவர் (ii) துணைக் குடியரசுத் தலைவர்

(iii) ராஜ்ய சபா உறுப்பினர்கள் (iv) சட்ட மேலவை உறுப்பினர்கள்

(1) i, ii மற்றும் iii சரி (2) i மற்றும் iii சரி

(3) i, iii மற்றும் iv சரி (4) i, ii, iii மற்றும் iv சரி

8. ஈரவைச் சட்ட மன்றம் இல்லாத மாநிலம் எது?

(1) கர்நாடகம் (2) பீகார் (3) தெலுங்கானா (4) கேரளா

9. கூற்று: இந்தியா கூட்டாட்சி முறை அரசாங்கத்தைக் கொண்டது.

காரணம்: இந்திய அரசியலமைப்பின் அதிகாரம், மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

(1) கூற்று சரி, கூற்றிற்கான விளக்கமும் சரியானது.

(2) கூற்று சரி, கூற்றிற்கான விளக்கம் சரியல்ல.

(3) கூற்று சரி, விளக்கம் தவறு.

(4) கூற்று மற்றும் விளக்கம் தவறு.

LIVEWORKSHEETS

10. ஈரவை என்பதற்குச் சரியான விளக்கத்தைத் தேர்ந்தெடு.

(1) இரு முதலமைச்சர்களைக் கொண்ட சட்டமன்றம்.

(2) ஆண் மற்றும் பெண் உறுப்பினர்களைக் கொண்ட சட்டமன்றம்.

(3) மேலவை மற்றும் கீழவையைக் கொண்ட சட்டமன்றம்.

(4) கவர்னரைத் தலைவராகவும், சட்டமன்ற உறுப்பினர்களையும் கொண்ட அவை.

11. மாநிலச் சட்டப்பேரவையின் உறுப்பினராவதற்குக் குறைந்தபட்ச வயது ______.

(1) 18 (2) 21 (3) 25 (4) 30

12. மாநில அரசு என்பது ______.

(1) மாநில அரசின் துறைகள் (2) சட்டமன்றம்

(3) (1) மற்றும் (2) (4) இவற்றில் எதுவுமில்லை

13. மாநில அரசு நிர்வாகத்தின் ஒட்டு மொத்தத் தலைவர் ______.

(1) குடியரசுத் தலைவர் (2) பிரதமர்

(3) முதலமைச்சர் (4) ஆளுநர்

14. முதலமைச்சர் மற்றும் ஏனைய அமைச்சர்களை நியமிப்பவர் ______.

(1) கவர்னர் (2) பிரதமர்

(3) குடியரசுத் தலைவர் (4) தேர்தல் ஆணையர்

15. கீழ்க்காணும் வாக்கியங்களில் தவறானதைத் தேர்ந்தெடு.

(1) சட்டமன்ற உறுப்பினர்கள் மக்களுடைய பிரதிநிதிகள் அல்லர்.

(2) ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களைச் சாராத அனைத்து அரசியல் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் என்று அழைக்கப்படுவர்.

(3) அரசு செயல்படுவதற்குச் சட்டமன்ற உறுப்பினர்கள் பொறுப்புடையவர்கள் ஆவார்கள்.

(4) ச.ம.உ என்பதன் விரிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் (MLA) ஆகும்.

LIVEWORKSHEETS

16. உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி ஓய்வு பெறும் வயது ______.

(1) 58 (2) 64 (3) 62 (4) 60

17. ஆளுநரின் பதவிக்காலம் ______.

(1) 1 ஆண்டு (2) 5 ஆண்டுகள் (3) 6 ஆண்டுகள் (4) 3 ஆண்டுகள்

18. மாநில அரசுப் பல்கலைக் கழகங்களின் வேந்தராகத் திகழ்பவர் (NMMS-2020-21)

(1) முதல்வர் (2) கல்வியாளர் (3) நீதிபதி (4) ஆளுநர்

19. தேர்தல்களை நடத்துவதும் அவற்றைக் கண்காணிக்கும் பணியைச் செய்வதுமான அமைப்பு?

(1) செயலாட்சிக்குழு (2) தேர்தல் ஆணையம்

(3) சட்டமன்றம் (4) நீதித்துறை

20. ஆங்கிலேயர்களால் இந்தியாவில் கட்டப்பட்ட முதல் கோட்டை ______.

(1) வில்லியம் கோட்டை (2) மும்பை கோட்டை

(3) லூயிஸ் கோட்டை (4) புனித ஜார்ஜ் கோட்டை

21. இந்தியாவில் எத்தனை மாநிலங்களில் சட்டமன்ற மேலவை உள்ளது?

(1) 5 (2) 6 (3) 7 (4) 8

22. சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் பதவிக்காலம் ______.

(1) 3 ஆண்டுகள் (2) 5 ஆண்டுகள் (3) 6 ஆண்டுகள் (4) 7 ஆண்டுகள்

23. மாறுபட்ட ஒன்றைக் கண்டுபிடி.

(1) மகாராஷ்டிரா (2) தெலுங்கானா (3) தமிழ்நாடு (4) பீகார்

24. மாநிலத்தின் கீழவை எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(1) பிரபுக்கள் அவை (2) சட்டமன்றப் பேரவை

(3) சட்டமன்ற மேலவை (4) பொது அவை

LIVEWORKSHEETS

25. யாருடைய ஒப்புதலுடன் மாநில அரசின் வரவு செலவுத் திட்டம் சட்டப்பேரவையில் அறிமுகப்படுத்தப்படும்?

(1) முதலமைச்சர் (2) பிரதமர் (3) ஆளுநர் (4) நிதி அமைச்சர்

26. முதலமைச்சர் என்பவர் ______.

(1) பெரும்பான்மைக் கட்சியின் தலைவர் (2) எதிர்க்கட்சித் தலைவர்

(3) (1) மற்றும் (2) (4) இவற்றில் எதுவுமில்லை

27. மாநில அரசின் மூன்று முக்கிய நிர்வாகப் பிரிவுகள் ______.

(1) மேயர், ஆளுநர், சட்டமன்ற உறுப்பினர்

(2) ஊராட்சி, நகராட்சி, மாநகராட்சி

(3) கிராமம், நகரம், மாநிலம்

(4) சட்டமன்றம், நிர்வாகத்துறை, நீதித்துறை

28. மாநில அரசின் உச்சபட்ச நீதி அமைப்பு ______.

(1) உச்ச நீதிமன்றம் (2) உயர் நீதிமன்றம்

(3) சட்டமன்றம் (4) மாவட்ட நீதிமன்றம்

29. ச. ம. உ என்பதன் விரிவாக்கம் ______.

(1) சட்டமன்ற உறுப்பினர் (2) சட்டமன்ற உரிமை

(3) சமத்துவ மக்கள் உறுப்பினர் (4) சட்டமன்ற உள்ளாட்சி

30. ஒரு குறிப்பிட்ட பகுதியைச் சேர்ந்த வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்படுபவர்

(1) முதலமைச்சர் (2) பிரதமர்

(3) சட்டமன்ற உறுப்பினர் (4) ஆளுநர்

31. சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் ஆளும் கட்சியைச் சாராதவராக இருப்பின் ______ என்று அழைக்கப்படுவார்.

(1) எதிர்க்கட்சித் தலைவர் (2) எதிர்க்கட்சி உறுப்பினர்

LIVEWORKSHEETS

(3) நிர்வாகி (4) மேயர்

32. ஒரு மாநிலத்தின் ஆளுநர் யாரால் நியமிக்கப்படுகிறார்?

(1) குடியரசுத் தலைவர் (2) துணைக் குடியரசுத் தலைவர்

(3) பிரதம மந்திரி (4) முதலமைச்சர்

33. கீழ்க்காணும் வாக்கியங்களில் தவறானது எது?

(1) ஆளுநராக இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.

(2) 25 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும்.

(3) நல்ல மனநலமுடையவராக இருத்தல் வேண்டும்.

(4) இலாபம் தரும் எந்தப் பதவியிலும் இருத்தல் கூடாது.

34. மாநில அமைச்சரவைக் குழுவின் தலைவர் ______.

(1) ஆளுநர் (2) முதலமைச்சர்

(3) சபாநாயகர் (4) உள்துறை அமைச்சர்

35. மாநிலச் சட்டமன்றக் கூட்டத்தைக் கூட்டவும், ஒத்திவைக்கவும் அதிகாரம் பெற்றவர் ______.

(1) உள்துறை அமைச்சர் (2) குடியரசுத் தலைவர்

(3) சபாநாயகர் (4) ஆளுநர்

LIVEWORKSHEETS